**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 174 of 2022

Deposition of D.W. 3

Name of the Witness: திரு.சங்கர்

Date : 04.11.2024

**குறுக்கு விசாரணை**

என்னுடைய சொந்த ஊர் வேப்பிலைப்பட்டி. வேப்பிலைப்பட்டிக்கும் அக்கமனஅள்ளி கிராமத்திற்கும் 30கி மீ தூரம் இருக்கும். நான் அக்கமனஅள்ளி கிராமத்தில் நிலம் வாங்கி 45 வருடங்கள் இருக்கும். எந்த வருடம் வாங்கினேன் என்று தோரயமாக தெரியவில்லை. எனக்கு தற்போது 47 வயதாகிறது. நான் நிலம் வாங்கும் போது நான் வேப்பிலைப்பட்டியில் 8வது படித்து கொண்டிருந்தேன். நான் 45 வருடத்திற்கு முன்பாக அக்கமனஅள்ளி கிராமத்தில் நிலம் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனபால் எனது பெரியம்மாள் மகளின் கணவர். என் அம்மா ராதாவின் உடன் பிறந்த சகோதரி முருகம்மாவின் மகள் பச்சியம்மாளை 1ம் பிரதிவாதி திருமணம் செய்து கொண்டுள்ளார். நான் தருமபுரி முன்சீப் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.199/2016 என்ற வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் முருகம்மாள் எனக்காக சாட்சியம் அளித்துள்ளார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

2) தனபால் மணிமேகனிடம் வாங்கிய சொத்தின் சர்வே எண், அளவு தெரியாது. செக்குபந்தி தெரியும். மணிமேகன் 1ம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்தார். தனபால்/1ம் பிரதிவாதி மணிமேகனிடம் சொத்தை

வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி காய்கறி ஏற்றுமதி வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார். 2ம் பிரதிவாதி தான் அவருடைய சுய வருமானத்தை கொண்டு மணிமேகனிடம் சொத்தை வாங்கினார் என்றாலும், தனபால் வாங்கவில்லை என்றால் சரியல்ல. அக்கமனஅள்ளி கிராமத்தில் சொத்து வாங்கி 10 வருடங்கள் கழித்து தான் நான் அக்கமனஅள்ளி கிராமத்திற்கு குடி வந்தேன்.

3) சின்னராமனிடம் வாதி, பிரதிவாதிகள் சொத்தை வாங்கியது எனக்கு தெரியும். அப்போது நான் சின்னபையனாக இருந்தேன். 22 வருடங்களுக்கு முன்பாக வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் பாகம் ஏற்பட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் பாகபிரிவினையே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வாதி, நான், பிரதிவாதிகள் ரோட்டிற்காக அரசாங்கத்திற்காக ரோடு விட்டதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ரோட்டிற்காக நிலம் அரசாங்கத்திற்காக ஒப்படைக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) தற்போது பஞ்சாயத்து துணை தலைவராக இருப்பது 1ம் பிரதிவாதியின் மனைவியின் உடன் பிறந்த சகோதரர் சித்தன். 1ம் பிரதிவாதி சித்தனின் நெருங்கிய உறவினர் என்பதால் பொய்யான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு அரசாங்கத்திடமிருந்து பணம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இருக்கும் தொகுப்பு வீடு வாதி, பிரதிவாதிகளுக்கு அரசாங்காத்தால் ஒதுக்கப்பட்ட பணத்தினால் கட்டப்பட்ட பொது வீடு என்றாலும் அது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து இல்லை என்றால்

சரியல்ல. பாகபிரிவினை ஏற்படவில்லை என்றாலும் வாதி அத்துமீறி செயல்படவில்லை என்றால் சரியல்ல. *1ம்* பிரதிவாதி நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.